*கவனிக்க.-2023.03.24 ஆந் திகதிய 2325 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி IV (அ) ( தமிழ் மொழிமூலம் ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2326 - 2023 මාර්තු මස 31 වැනි සිකුරාදා - 2023.03.31

*2326 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 126 |


**கவனிக்க.**- (i) தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2023, மாச்சு மாதம் 17ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) பயங்கரவாதத்திற்கெதிரானது சட்டமூலம் 2023, மாச்சு மாதம் 17ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, ஏப்பிறல் மாதம் 21ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023,ஏப்பிறல் மாதம் 06ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


129- B 082441- 353 (2023/03)

# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 09

### காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

தென் மாகாண சபையின் காலி மாவட்டத்தின் போப்பே - போத்தல பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் பிரபாஷி சாருந்தி விதானபதிரண ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதி அவர்களால் 1994.07.12 ஆந் திகதி அன்பளிப்புச் செய்யப்பட்ட கா/9/பிர/15470 ஆம் இலக்கம் கொண்ட அன்பளிப்புப் பத்திரத்தின் உரித்துடையவரான, போத்தல, நராவல முலனஹேனயில் வசிக்கின்ற போத்திவெல மாரகே பேமவதீ அவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட காலி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தின் இலக்கம் எல்.ரீ.ஒ.பீ./4 145 இன் கீழ் 1995.02.16 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டு உள்ள காணிக்கு பிரதிநிதி என்பதனால் சட்டரீதியான உரித்துடையவர் எவரும் இல்லாத படியால் அல்லது உரிமை கோருகின்ற ஒருவர் இருந்தும் அவர் பிரதிநிதியாக விருப்பம் இன்மையால் பிரதிநிதியாக எவரும் ஆஜராகாமை காரணமாக அவ் அன்பளிப்புப் பத்திரத்தின் மேல் உள்ள சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் மூலம் அறிவித்துக் கொள்கின்றேன். இது தொடர்பாக யாதேனும் ஒரு முறைப்பாடு காணப்படின் அதனை 2023.04.21 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தரவும்.

#### அட்டவணை

தென் மாகாணத்தின் காலி நிருவாக மாவட்டத்தின் போப்பே - போத்தல பிரதேச செயலகப் பிரிவின் நான்கு கடவைகள் பத்துவின்/கோரளயே 111 எப் முலன கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் நராவல எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்கம் 90/ 3/2 ஒ 18/36-37 ஆம் இலக்கம் கொண்ட களப் பத்திரத்தின் / துண்டங்களாக உடைக்கப்பட்ட நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்கம் ஆ.வ.கா 2506 கொண்ட துண்டங்களான அளவில் துண்டங்களாக உடைக்கப்பட்ட நிலத்துண்டின் 23 ஆம் இலக்கம் கொண்ட நிலத்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான அளவில் 0.044 ஹெக்டயார் விசாலம் உள்ளதாக அளந்து மதிப்பீடு செய்யப்பட்டு உள்ள, துன்ஹவுலே கொடகெலே என அழைக்கப்படுகின்ற கீழ் உள்ளவாறான எல்லைகளைக் கொண்ட அரச காணியின் பகுதி: முலஹேன.

வடக்கு : நிலத்துண்டு இலக்கம் 11;
கிழக்கு : நிலத்துண்டு இலக்கம் 09;
தெற்கு : நிலத்துண்டு இலக்கம் 09;
மேற்கு : நிலத்துண்டு இலக்கம் 22 மற்றும் 13.

பிரபாஷி சீ. விதானபதிரண,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
போப்பே, போத்தல.
2022.12.30.

03- 944/1

இணைப்பு 09

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தின், பெந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் பந்துல ப்ரீத்திராஜ் அபேசேக்கர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதி அவர்களால் 1994, ஒற்றோபர் 31ஆந் திகதி அன்பளிப்புச் செய்யப்பட்ட கா/ 6/பிர/15961 எல்.எல்.4025 ஆம் இலக்கம் கொண்ட அன்பளிப்புப் பத்திரத்தின் உரித்துடையவரான, கோனகலபுர பெந்தோட்டையில் வசிக்கின்ற கணஹெர ஆரச்சிகே ஏமஸ்ஸிக்ஞ்ஞோ அவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பலப்பிட்டிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தின் இலக்கம் எல். ரீ.ஓ583 இன் கீழ் 1995.05.29 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டு உள்ள காணிக்கு பிரதிநிதி என்பதனால் சட்டரீதியான உரித்துடையவர் எவரும் இல்லாத படியால் அல்லது உரிமை கோருகின்ற ஒருவர் இருந்தும் அவர் பிரதிநிதியாக விருப்பம் இன்மையால் பிரதிநிதியாக எவரும் ஆஜராகாமை காரணமாக அவ் அன்பளிப்புப் பத்திரத்தின் மேல் உள்ள சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் மூலம் அறிவித்துக் கொள்கின்றேன். இது தொடர்பாக யாதேனும் ஒரு முறைப்பாடு காணப்படின், அதனை 2023.04.21ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தரவும்.*

**அட்டவணை**

*தென் மாகாணத்தின், காலி நிருவாக மாவட்டத்தின், பெந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் பெந்தர வலல்லாவிட்ட கோரளே மேற்கு இலக்கம் 11 ஈ, கொலணிய கல்துடுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்கம் ஆ.வ.கா 2476 ஆம் இலக்கம் கொண்ட நிலத்துண்டின் இலக்கம் 40 கொண்ட துண்டங்களாக உடைக்கப்பட்ட அளவில் 0.283 ஹெக்டயார் விசாலம் உள்ளதாக அளந்து மதிப்பீடு செய்யப்பட்டு உள்ள, துன்ஹவுலே கொடகெலே கந்த என அழைக்கப்படுகின்ற கீழ் உள்ளவாறான எல்லைகளைக் கொண்ட அரச காணியின் பகுதி: கெடபலவத்தை.*

*வடக்கு : நிலத்துண்டு இலக்கம் 41 மற்றும் ஆ.வ.கா. 550 நிலத்துண்டு இலக்கம் 12;*
*கிழக்கு : நிலத்துண்டு இலக்கம் 38;*
*தெற்கு : நிலத்துண்டு இலக்கம் 37;*
*மேற்கு : ஆ.வ.கா.550 நிலத்துண்டு இலக்கம் 12.*

*பி.பீ. அபேசேக்கர,*
*பிரதேச செயலாளர்.*

*பிரதேச செயலகம்,*
*பெந்தோட்டை,*
*2022.11.15.*

*03- 944/2*

---

இணைப்பு 09

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தின், பெந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் பந்துல பிரீத்திராஜ் அபேசேக்கர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதி*

அவர்களால் 1992, யூன் 09ஆந் திகதி அன்பளிப்புச் செய்யப்பட்ட தொடர் இலக்கம் கா/ 6/ அ 13822 மற்றும் எல்.எல்.103635 ஆம் இலக்கத்தைக் கொண்ட அன்பளிப்புப் பத்திரத்தின் உரிமையாளர் ஆகிய, ஓபடவத்தை பெந்தொட்டையில் வசிக்கின்ற லேஸ்துருகே ஆத்தர் பிரனாந்து அவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பலப்பிட்டிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தின் இலக்கம் எல்.டீ.ஓ.387 இன் கீழ் 1982.10.27 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் உள்ள உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு சட்டரீதியான பதில் உரிமையாளர் இல்லாமையால் மற்றும் உரிமையுடன் கூடிய ஒருவர் இருக்கும் போது அவர் பதில் உரிமை கோர விருப்பமின்னை பதில் உரிமை கோர ஒருவரை நியமிக்கப்படவுமில்லை என்ற தகவல் கிடைத்துள்ளதால் அந்த அளித்தல் பத்திரம் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் நிராகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறித்து இங்கு அறியத்தருகின்றேன். இது தொடர்பாக எதிர்ப்புக்கள் இருப்பின் அவற்றை 2023.04.21ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தரவும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் காலி நிருவாக மாவட்டத்தின் பெந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் பெந்தர வலல்லாவிட்ட எல்லையின் மேற்கே இல. 03 பீ, சிங்ஹரூபாகம ( முதல் யாத்திராமுல்லை) கிராம அலுவலர் பிரிவின் ஓபடவத்தை எனும் பெயருடைய கிராமத்தில் அமைந்துள்ள அளவையாளர் நாயகத்தின் பொறுப்பிலுள்ள இலக்கம் இ.கி.வ. 2215 ஆம் இலக்கத்தைக் கொண்ட நிலம் துண்டாடப்பட்ட வரைபடத்தில் / அளவையாளர் நாயகத்தின் இலக்கம் 65 கொண்ட நிலம் துண்டாடப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அளவில் 0.066 ஹெக்டயார் விசால நிலப்பரப்பைக் கொண்ட மத்தெவெல எனும் பெயரில் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு எல்லைகள் கொண்ட அரச காணி.

வடக்கு : இந்த வரைபின் நிலத்துண்டு இலக்கம் 57 மற்றும் 66;
கிழக்கு : இந்த வரைபின் நிலத்துண்டு இலக்கம் 57 மற்றும் 67;
தெற்கு : இந்த வரைபின் நிலத்துண்டு இலக்கம் 63, 66 மற்றும் 67;
மேற்கு : இந்த வரைபின் நிலத்துண்டு இலக்கம் 63 மற்றும் 64.

பி. பீ. அபேசேக்கர,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
பெந்தோட்டை,
2022.05.17.

03- 944/3

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/70695.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : CPC/ LC/ LD/4/01/32/ 1104.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

நுவரெலியா மாவட்டம், நுவரெலியா பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 534 கந்தபொல கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த கந்தபொல கிராமத்தின் நுவ/ 3/2/1/2 கந்தபொல / 98 என்னும் இலக்கமுடைய நில வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ள 0.00286 ஹெக்டயார் (சதுர அடி 308) அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திருமதி நாவுருன்ன குருகே அமரலதா என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : NU/ NEW/2020/65 ஆம் இலக்க நில வரைபடத்தின் துண்டு இலக்கம் C இன் மீதிப் பகுதி மற்றும் துண்டு இலக்கம் D;
கிழக்கு : NU/ NEW/2020/65 ஆம் இலக்க நில வரைபடத்தின் துண்டு இலக்கம் D மற்றும் பாதை ஒதுக்கம்;
தெற்கு : பாதை ஒதுக்கம் மற்றும் NU/ NEW/ 2020/65 ஆம் இலக்க நில வரைபடத்தின் துண்டு இலக்கம் B;
மேற்கு : NU/ NEW/2020/65 ஆம் இலக்க நில வரைபடத்தின் துண்டு இலக்கம் B மற்றும் C என்பவற்றின் மீதிப் பகுதி .

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசினால்

நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2023.02.24ஆந் திகதியிலிருந்து 30 வருடங்கள்);

**வருடாந்தக் குத்தகை**.- குத்தகை அமுல்படுத்தப்படும் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை (ரூ.5,000,000.00) விடவும் குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை (ரூ.5,000,000.00) விடவும் அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப்பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 01 வருட காலப்பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/உதவிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/உதவிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2023.02.24 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யஅனுமதி வழங்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து ஒப்பந்தம் சுயமாகவே இரத்தாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப்பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக் கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

கே.ஆர். மெத்மா ரணசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, மாச்சு 20.

03- 1027

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/72792.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : EP/ 28/ LB/ L-10/ LS/TRI/ MUT/30.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி இல. 218 ஏ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கிளிவெட்டி எனும் கிராமத்தில் அமைந்துள்ள இலக்கம் 0946 கொண்ட வரைபடத்தில் துண்டு இல. ஏ இல் காட்டப்பட்ட 01 றூட் 30.67 பேர்ச் விஸ்தீரணமுள்ள அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகச் கந்தையா சுயலஷ்மி எனும் பெயரில் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : வி. சந்திர மோகனால் கைப்பற்றப்பட்டுள்ள எப் ரீ பி 7 வரைபடத்தில் துண்டு இல. 3113 மற்றும் திருகோணமலை மட்டக்களப்பு ஏ15 வீதி (RAD);

கிழக்கு : திருகோணமலை மட்டக்களப்பு ஏ15 வீதி (RAD) மற்றும் கந்தன் குழந்தைவேலுவால் கைப்பற்றப்பட்டுள்ள எப் ரீ பி 7 வரைபடத்தில் துண்டு இல. 3114;

தெற்கு : கந்தன் குழந்தைவேலுவால் கைப்பற்றப்பட்டுள்ள எப் ரீ பி 7 வரைபடத்தில் துண்டு இல. 3114 மற்றும் பி விநாயமூர்த்தியால் கைப்பற்றப்பட்டுள்ள 3112;

மேற்கு : வி. சந்திரமோகனால் கைப்பற்றப்பட்டுள்ள எப்ரீபி 7 வரைபடத்தில் துண்டு இல. 3113 மற்றும் பி. விநாயமூர்த்தியால் கைப்பற்றப்பட்டுள்ள 3112.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது (30) வருடங்கள் 2023.03.01ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி;

**வருடாந்தக் குத்தகை**.- 2023 ஆம் ஆண்டுக்கான காணியின் விலைமதிப்பீடு பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5, 000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% ஆகும். 2022 ஆம் ஆண்டிற்கான காணியின் விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் காணியின் சந்தைப் பெறுமதியில்4% ஆகும். இந்தக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாக செலுத்தப்படல் வேண்டும்.

*தவணைப் பணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக மாகாணக் காணி ஆணையாளர்/பிரதி காணி ஆணையாளர் பிரதேச செயலாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2023.03.01 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை உரிமை மாறல் அல்லது காணி கீழ்க்குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் அனுமதிக்கப் படமாட்டாது. ;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

கே.ஆர். மெத்மா ரணசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, மாச்சு 10.

03- 927

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.